


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சர்வதேச ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு, கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரி மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (28.10.2016) கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்தார். அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு. ஜெ. கிளாரன்ஸ்டேவி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 765/2016 நாள்: 28.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சர்வதேச ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு, கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரி மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணியை இன்று (28.10.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சர்வதேச ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு, கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரி மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (28.10.2016) கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 28-ம் தேதி சர்வதேச ஆயுர்வேத தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. பேரணியின் முக்கிய நோக்கமானது சர்க்கரை நோய் எவ்வாறு கட்டுப்படுத்துவது குறித்தும், அதனை எவ்வாறு வராமல் தடுப்பது குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், சுமார் 300-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர். பேரணியானது நாகர்கோவில் டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி, வேப்பமூடு சந்திப்பு, அண்ணா பேருந்துநிலையம் வழியாக, மீண்டும் கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரிக்கு வந்து நிறைவடைந்தது.

அதனை தொடர்ந்து ஆயுர்வேத கல்லூரியில் நீரிழிவு நோயாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது. நீரிழிவு நோய் வருமுன் காத்தலும், குணப்படுத்துதலும் என்ற கருத்தில், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு, சர்க்கரை நோயாளிகள் உண்ண வேண்டிய உணவு, சர்க்கரை நோய் வராமல் தடுக்கும் முறைகள் குறித்து மருத்துவர்கள் முகாமில் விளக்கம் அளிக்க உள்ளார்கள் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு. ஜெ. கிளாரன்ஸ்டேவி, துணை இயக்குநர் (பொ) (சுகாதார பணிகள்) மரு. எம். மதுசூதனன் உள்ளிட்ட அரசு மருத்துவர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.